**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.29/2025                                                  நாள்- 13.08.2025

**வா.சா.1- முத்துச்சாமி**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பில்**

வழக்கின் சொத்து என் அப்பாவிற்கு பூர்விகமாய் பாத்தியப்பட்ட சொத்து என்றும், இந்த சொத்தை பொறுத்து என் முதல் மனைவியின் பிள்ளைகளும் , இரண்டாவது மனைவியின் பிள்ளைகளோ நானும் பாகம் எதுவும் பிரித்துக் கொண்டோமா என்றால் இல்லை. பூர்விகமாய் பாத்தியப்பட்ட பாகம் பிரிக்காத ெ சாத்துக்களை பொறுத்து நான் இரண்டாம் வாதிக்கு தான செட்டில் மெண்ட் எழுதிக் கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நாளது தேதிவரை ஊர்ஜித்திற்கு வரவில்லை என்றும், நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்ததால் அந்த செல்வாக்கை பயன்படுத்தி பட்டா மற்றும் தீர்வை இரசீது மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1 சொத்தின் மதிப்பு ரூ7,90,000/-என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாவா சொத்தின் மதிப்பு ரூ1,00,100/- என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தின் மதிப்பை சட்டத்தின் படி பின்பற்றாமல் குறைவாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.